# சிதம்பரம் நடராஜர் கோவிலுக்கு வெளிநாடு வாழ் தமிழர்கள் பண்பாட்டு சுற்றுலா



**சிதம்பரம், ஆக.5–**

**'வேர்களைத் தேடி' திட்டத்தின் கீழ் 14 நாடுகளை சேர்ந்த 100 அயலக தமிழர்கள் சிதம்பரம் நடராஜர் கோவிலை பார்வையிட்டனர்.**

அயலகத் தமிழர் நலத்துறையால் வெளிநாடு வாழ் தமிழ் இளைஞர்களுக்கான 'வேர்களைத் தேடி' என்ற கலாச்சார பரிமாற்ற சுற்றுலா திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ் கலை, பண்பாடு, கலாச்சாரத்தை அயலக தமிழர்களிடம் பரிமாற்றம் செய்வது, புலம்பெயர்ந்து வாழும் இளைஞர்களுக்கு தமிழகத்தின் 'மரபின் வேர் களோடு' உள்ள தொடர்பை புதுப்பிப்பது என்பதை நோக்கமாக கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

இதில் ஆண்டு தோறும் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தேர்வு செய்யப்பட்டு, தமிழகத்துக்கு அழைத்து வரப்பட்டு, தமிழக அரசு சார்பில் வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கு சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டு வருகிறார்கள்.

வேர்களைத் தேடி என்ற இந்த பயணத்தில் தமிழக கலாச்சாரம், கட்டிடக்கலை, முக்கிய நீர்நிலைகள், பழம்பெரும் கோவில்கள், பழக்கவழக்கங்கள் உள்ளிட்டவர்களை தெரிந்து கொள்வதற்காக அயலாகத் தமிழர்களுக்கு இந்த பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 14 மாவட்டங்களில் கடந்த 1 முதல் வரும் 15ம் தேதி வரை அயலாக தமிழர்கள் பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் 4வது கட்டமாக, "வேர்களைத் தேடி" திட்டத்தில் பிரான்ஸ், ஜெர்மன், மலேசியா, கனடா, மியான்மர், இலங்கை, பிஜி, தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட 14 வெளிநாடுகளை சேர்ந்த 100 தமிழர்கள் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் உள்ள உலக புகழ்பெற்ற நடராஜர் கோவிலுக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்கள், நடராஜரையும் சிவகாமசுந்தரியையும் தரிசனம் செய்தனர். தொடர்ந்து கோவிலை சுற்றிப்பார்த்தனர்.


கட்டிடக் கலைகளையும், சிற்பங்களையும், உலகிற்கு தேவாரம் மற்றும் திருவாசகம் கிடைக்கப்பெற்ற இடத்தினையும், தங்கத்தால் ஆன கோபுரத்தினை பார்த்து ரசித்தனர். பின்னர் கோவிந்தராஜ பெருமாள், தாயார் சன்னதி, முக்குருணிவிநாயகர் கோவில் ஆகிய இடங்களில் சாமி தரிசனம் செய்தனர்.

மேலும் உலகின் 2வது மிகப்பெரிய சதுப்பு நிலங்களுடன் கூடிய அலையாத்தி காடுகளை கொண்ட பிச்சாரவரம் சுற்றுலா மையத்தினை பார்வையிட்டு, படகு சவாரி மேற்கொண்டனர்.

அப்போது அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை கண்காணிப்பாளர்கள் கனிமொழி, தனலட்சுமி, மாவட்ட சுற்றுலாத்துறை அலுவலர் கண்ணன், சிதம்பரம் வருவாய் ஆய்வாளர் குகநாதன், சிதம்பரம் கிராம நிர்வாக அலுவலர் ஆனந்தன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



தொழில்மேதை வி.ஜி.பன்னீர்தாசின் 93ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு, அவரது நினைவிடத்தில், விஜிபி தலைவர் டாக்டர் வி.ஜி.சந்தோசம் மலர் தூவி மரியாதை செலுத்தினார். விஜிபி குழுமத்தின் இயக்குநர்கள் விஜிபி ரவிதாஸ், விஜிபி ராஜாதாஸ், விஜிபி மார்பிதாஸ், விஜிபி சுரோஜித் பாபுதாஸ், விஜிபி மிலன் மார்பிதாஸ், மற்றும் அருட்தந்தை ஸ்டீபன் ஆகியோர் உள்ளனர்.




# ஆர்.எம்.கே பாடசாலா பள்ளியில் கூடைப்பந்து போட்டி

**சென்னை, ஆக. 5–**

**ஆர்.எம்.கே பாடசாலா பள்ளியில் சிபிஎஸ்இ பள்ளிகளுக்கு இடையிலான கூடைப்பந்து விளையாட்டுப் போட்டியை ஆர் .எம். கே. கல்விக் குழுமத்தின் தலைவர் வித்யா ரத்னா ஆர்.எஸ். முனிரத்தினம்** தொடங்கி வைத்தார்.

இவ்விளையாட்டுப் போட்டியில் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இருந்து 200 பள்ளிகளும், 5000 மாணவ, மாணவியர்களும் கலந்து கொள்கின்றனர். இதில் 14, 17 மற்றும் 19 வயதுக்கு உட்பட்டோர் என்ற மூன்று பிரிவுகளின் கீழ் 400 போட்டிகள் ஆர்.எஸ் .எம். கல்வி குழுமத்தில் கீழ் இயங்கி வரும் பள்ளி, கல்லூரிகளில் உள்ள உலகத் தரம் வாய்ந்த பத்து கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடைபெறுகிறது.

4 நாட்கள் நடைபெறும் போட்டிகளின் முடிவில் வெற்றி பெறும் முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிகளுக்கு பதக்கங்களும், சிபிஎஸ்இ வழங்கும் சான்றிதழ்களும், கோப்பைகளும் வழங்கப்படுகிறது.

நிகழ்ச்சியில் துணைத் தலைவர் கிஷோர், இயக்குனர் ஜோதி நாயுடு, செயலாளர் எலமஞ்சி பிரதீப், ,ஆர் .எம். கே. பாடசாலாபள்ளியின் முதல்வர் சந்திரிகா பிரசாத் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## டிடிகே ஹெல்த்கேர் லிமிடெட்

பதிவு அலுவலகம் : எண்.6, கதீட்ரல் சாலை, சென்னை 600 086.
CIN : L24231TN1958PLC003647 Website: www.ttkhealthcare.com

**ஜூன் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

(ரூ. லட்சங்களில்)

| வ. எண். | விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | (30/06/2025) தணிக்கை செய்யாதது | (31/03/2025) தணிக்கை செய்தது | (30/06/2024) தணிக்கை செய்யாதது | (31/03/2025) தணிக்கை செய்தது |
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 22,642.98 | 19,035.96 | 20,790.21 | 80,149.34 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரணமான பொருட்களுக்கு முன்) | 1,765.35 | 2,761.99 | 2,102.38 | 9,442.52 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரணமான பொருட்களுக்கு பின்) | 1,765.35 | 2,175.60 | 4,079.43 | 10,833.18 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரணமான பொருட்களுக்கு பின்) | 1,299.94 | 1,614.83 | 3,157.51 | 8,165.69 |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானத்தை [காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்குப் பின்) மற்றும் பிற விரிவான வருமானம் (வரிக்குப் பின்)] உள்ளடக்கி உள்ளது | 1,357.13 | 1,052.27 | 3,346.98 | 7,825.96 |
| 6 | சம பங்கு மூலதனம் (ஒரு பங்கின் முக மதிப்பு ரூ.10/-) | 1,413.03 | 1,413.03 | 1,413.03 | 1,413.03 |
| 7 | முந்தைய கணக்கியல் ஆண்டின் இருப்புநிலையின்படி பிற பங்குகள் (மறுமதிப்பீட்டு கையிருப்பு தவிர) | - | - | - | 104,650.36 |
| 8 | ஒரு பங்கு வருவாய் (ஒவ்வொன்றும் ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | |
| | (a) அடிப்படை (ரூபாயில்) | 9.20 | 11.43 | 22.35 | 57.79 |
| | (b) பலமிழந்தது (ரூபாயில்) | 9.20 | 11.43 | 22.35 | 57.79 |

**குறிப்புகள்:**

(1) செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள் 2015ன் – விதிமுறை 33ன் கீழ் பங்குச் சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்ட, டிடிகே ஹெல்த்கேர் லிமிடெட்– ன் (நிறுவனம்) மேலே கொடுக்கப்பட்டுள்ள ஜூன் 30, 2025ல் முடிவடைந்த முதல் காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதி நிலை முடிவுகளின் விரிவான அறிக்கையின் ஒரு பகுதியாகும்.

(2) ஜூன் 30, 2025ல் முடிவடைந்த முதல் காலாண்டிற்கான டிடிகே ஹெல்த்கேர் லிமிடெட்– ன் (நிறுவனம்) இந்த நிதிநிலை முடிவுகள் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திலும் மற்றும் காணொளி மூலமும் ஆகஸ்ட் 04, 2025 அன்று நடைபெற்ற தணிக்கைக் குழு கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு, நிறுவனத்தின் இயக்குநர்கள் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(3) இந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் கட்டுப்பாடு 33ன் கீழ் நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் குறுகிய பரிசீலனை செய்யப்பட்டது.

(4) (a) முந்தைய ஆண்டின் முதல் காலாண்டில், நிறுவனமானது, சென்னை, மஹிந்திரா வேர்ல்ட் சிட்டியில் உள்ள கட்டிடத்துடன் கூடிய குத்தகை நிலத்தை ரூ.2,300 லட்சத்துக்கு விற்றுள்ளது மற்றும் விற்பனையின் லாபம் ரூ.1,977.50 லட்சம் (நிகரமாக) மேற்கண்ட முடிவுகளில் கருதப்பட்டது.

(b) முந்தைய ஆண்டின் நான்காவது காலாண்டில், வெளிநாட்டு மேம்பாட்டு உதவிக்கு 90 நாள் இடைநிறுத்தம் மற்றும் கொள்முதல் ஆர்டர்கள் ரத்து செய்யப்பட்டதன் காரணமாகவும் மற்றும் மாற்று வாங்குபவர்களுக்கு சந்தைப்படுத்த முடியாதவை சாதனங்கள் பிரிவைச் சேர்ந்த காரணத்தினாலும், USAID திட்டத்தின் கீழ் ஏற்றுமதி செய்வதற்காக இருந்த ரூ.586.39 லட்சம் மதிப்புள்ள ஆண் கருத்தடை சாதனங்களின் முழு மதிப்பையும் நிறுவனம் தள்ளுபடி செய்துள்ளது.

(5) மார்ச் 31, 2025ல் முடிவடைந்த காலாண்டிற்கான புள்ளிவிவரங்கள், முழு நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட புள்ளிவிவரங்களுக்கும், நிலுவைகளுக்கான சரிசெய்தலுக்குப் பிறகு தொடர்புடைய நிதியாண்டின் ஆண்டு முதல் தேதி வரை மற்றும் மூன்றாம் காலாண்டு இறுதி வரையிலான வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்களுக்கும் இடையிலான சமநிலை புள்ளிவிவரங்களுக்கும் மற்றும் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதாகும்.

(6) முந்தைய காலங்கள் / ஆண்டின் புள்ளி விவரங்களானது தற்போதைய காலங்கள் / ஆண்டுக்கான வழங்கல்களுக்கு இசைவாக அவசியமான எல்லா இடங்களிலும் ஒருங்கிணைக்கப்பட்டு மற்றும் மறுவகைப்படுத்தப்பட்டது.

(7) ஜூன் 30, 2025ல் முடிவடைந்த முதல் காலாண்டிற்கான முழு நிதிநிலை முடிவுகள் BSE Limited இணையதளம் (www.bseindia.com), National Stock Exchange of India Limited இணையதளம் (www.nseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளத்திலும் (www.ttkhealthcare.com) உள்ளது.

இடம்: சென்னை
தேதி: ஆகஸ்ட் 04, 2025

டிடிகே ஹெல்த்கேர் லிமிடெட்டிற்காக
டி டி ரகுநாதன்
நிர்வாகத் தலைவர்

**SHRIRAM FINANCE LIMITED**

MANIMANGALAM BRANCH VEHICLE FOR SALE

| S.NO. | VEH.NO. | MAKE | MODEL |
|---|---|---|---|
| 1. | TN25AS8475 | FORCE TEMPO TRAVELLER-P | 2016 |

CONTACT-6380730561

## பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் திரு.K. தண்டபாணி, த/பெ. திரு.கந்தசாமி எண்.2/22, ஜெயம்மாள் தெரு, ஐயாவு காலனி, அமைந்தகரை, சென்னை-600 029 இதன் மூலம் தெரிவிப்பது என்னவென்றால் தனது சொத்தான பிளாட் எண்.85 & 88, பழைய எண்.22, புதிய எண்.2, ஜெயம்மாள் தெரு, ஐயாவு காலனி, அமைந்தகரை, சென்னை-600 029 அரும்பாக்கம் கிராமம், அமைந்தகரை தாலுக்கா, சென்னை மாவட்டம் R.S.No.16/1, 16/3 & 18/3 (Part) T.S.No.13/1 & 14/1 பிளாக் எண்.26 விஸ்தீரணம் 2350 சதுர அடிகள் மற்றும் அதிலுள்ள கட்டிடம் உட்பட சம்பந்தப்பட்ட அசல் பிழை திருத்தல் பத்திரம் தேதி 26.10.81 in Doc No.5469/1981 மற்றும் அசல் விற்பனை ஆவணம் தேதி 31.08.1984 vide Doc No.2380/1984 Before SRO Kodambakkam போன்றவற்றை தான் சட்ட நிகழ்வுகளுக்காக நகல் எடுக்கும்பொழுது தவற விட்டு விட்டார். மேற்கண்ட அசல் பத்திரங்களை கண்டெடுக்கும் நபர்கள் இந்த அறிவிப்பிட்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் கீழ்கண்ட முகவரிடம் தவறாமல் சேர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**R.RAMESH KUMARM,** Advocate
43/11, Srinivasaperumal Koil 1st Street,
Thiruvottiyur, Chennai–-600 019.
Mobile No.: 98410 18689, Phone No.: 044 2573 1119
E–mail: r.rameshchander@gmail.com

## படிவம் B
## பொது அறிவிப்பு

(நொடித்தல் மற்றும் இந்திய திவால் நிலை வாரியத்தின் (கலைப்பு நடைமுறைகள்) விதிமுறைகள் 2016-ன், விதி 12- ன் கீழ்)

**பைலெடெக் இன்ஃப்ரா பிரைவேட் லிமிடெட்டின் பங்குதாரர்கள் கவனத்திற்கு**

| வ. எண் | தகவல்கள் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | கார்ப்பரேட் கடனாளர் பெயர் | **பைலெடெக் இன்ஃப்ரா பிரைவேட் லிமிடெட்** |
| 2. | கார்ப்பரேட் கடனாளர் துவக்கத் தேதி | 04/07/2016 |
| 3. | எந்த அதிகாரத்தின் கீழ் கார்ப்பரேட் கடனாளர் துவக்கம்/பதிவு | கம்பெனிகள் பதிவாளர், சென்னை |
| 4. | கார்ப்பரேட் கடனாளரின் நிறுவன அடையாள எண் / வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண் | U45309MH2016PTC283208 |
| 5. | கார்ப்பரேட் கடனாளரின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக (வேறு ஏதேனும் இருப்பின்) முகவரி | 106, CTS 1622, வில்லிங்டன் பிசினஸ் பார்க், ஏகே சாலை, அந்தேரி கிழக்கு, ஹோண்டா ஷோரூமுக்கு எதிரே, மும்பை, மகாராஷ்டிரா, இந்தியா 400 059 |
| 6. | திவால் தீர்மான நடைமுறை மூடும் தேதி | 30/07/2025 |
| 7. | கார்ப்பரேட் கடனாளரின் கலைப்பு துவங்கும் தேதி | NCLT உத்தரவுத் தேதி 31/07/2025 |
| 8. | கலைப்பலுவலராக செயல்படும் திவால் தீர்மான நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண் | **திரு. எஸ். கோபாலகிருஷ்ணன் IBBI/IPA-002/IP-N00151/2017-18/10398** |
| 9. | குழுவில் பதிவு செய்துள்ளபடி கலைப்பு அலுவலரின் முகவரி மற்றும் மின்னஞ்சல் | முகவரி: 203, தி காட்கோபர் நீல்கந்த் சிஎச்எஸ், ஜெதாபாய் சந்து, காட்கோபர் (கிழக்கு), மும்பை 400077 Email: gopi63.ip@gmail.com |
| 10. | தொடர்புக்கான கலைப்பு அலுவலரின் முகவரி மற்றும் மின்னஞ்சல் | முகவரி: 203, தி காட்கோபர் நீல்கந்த் சிஎச்எஸ், ஜெதாபாய் சந்து, காட்கோபர் (கிழக்கு), மும்பை 400077 Email: gopi63.ip@gmail.com liq.piletechinfra@gmail.com |
| 11. | கோரிக்கைகள் சமர்ப்பிக்கும் கடைசி தேதி | 30/08/2025 |

மும்பையில் உள்ள தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் டிவிஷன் பெஞ்ச், **பைலெடெக் இன்ஃப்ரா பிரைவேட் லிமிடெட்டி**ன் கலைப்பை 31/07/2025 அன்று தொடங்க உத்தரவிட்டுள்ளதாக இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**பைலெடெக் இன்ஃப்ரா பிரைவேட் லிமிடெட்டின்** பங்குதாரர்கள் வரிசை எண்.10க்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ள கலைப்பலுவலரின் முகவரிக்கு தங்கள் உரிமை கோரல்களை ஆதாரத்துடன் 30/08/2025 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் மின்னணு ஆதாரங்களின் மூலம் மட்டுமே தங்களின் உரிமை கோரல்களை சமர்ப்பிக்க வேண்டும். இதர கடன் வழங்கியவர்கள் ஆதாரங்களுடன் கூடிய தங்களது உரிமை கோரல்களை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அல்லது மின்னணு மூலமாகவோ சமர்ப்பிக்கலாம்.

தவறான சான்றுகளை சமர்ப்பித்தால் அபராதம் விதிக்கப்படும்

**நாள் : 05.08.2025**
**இடம்: மும்பை**

**எஸ். கோபாலகிருஷ்ணன்**
**திவால் தீர்மான நிபுணர்**
**IBBI Registration No.: IBBI/IPA-002/IP-N00151/2017-18/10398**
**AFA Valid up to: December 31, 2025**
முகவரி: 203, தி காட்கோபர் நீல்கந்த் சிஎச்எஸ், ஜெதாபாய் சந்து, காட்கோபர் (கிழக்கு), மும்பை 400077

## SUNDARAM FINANCE

*Enduring values. New age thinking.*

**30 ஜூன் 2025 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**

(₹ கோடிகளில்)

| விவரங்கள் | தனித்தது | | | | ஒருங்கிணைக்கப்பட்டது | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | முடிவடைந்த காலாண்டு 30.06.2025 | முடிவடைந்த காலாண்டு 31.03.2025 | முடிவடைந்த காலாண்டு 30.06.2024 | முடிவடைந்த ஆண்டு 31.03.2025 | முடிவடைந்த காலாண்டு 30.06.2025 | முடிவடைந்த காலாண்டு 31.03.2025 | முடிவடைந்த காலாண்டு 30.06.2024 | முடிவடைந்த ஆண்டு 31.03.2025 |
| இயக்கங்களின் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 1,883.23 | 1,803.39 | 1,467.82 | 6,520.44 | 2,348.93 | 2,259.05 | 1,951.60 | 8,485.63 |
| நிகர இலாபம் / (நஷ்டம்) நடப்புக் காலத்திற்கான (வரிக்கு முன், தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகள்) | 559.69 | 726.92 | 402.16 | 2,061.68 | 575.32 | 764.78 | 524.55 | 2,447.39 |
| நிகர இலாபம் / (நஷ்டம்) நடப்புக் காலத்திற்கான வரிக்கு முன், (தனிப்பட்ட வகைகளுக்குப் பின் மற்றும் / அல்லது அசாதாரண வகைகள்) | 559.69 | 726.92 | 402.16 | 2,061.68 | 575.32 | 764.78 | 524.55 | 2,447.39 |
| நிகர இலாபம் / (நஷ்டம்) நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின், (தனிப்பட்ட வகைகளுக்குப் பின் மற்றும் / அல்லது அசாதாரண வகைகள்) | 428.72 | 545.85 | 307.65 | 1,542.65 | 475.21 | 552.98 | 434.85 | 1,879.44 |
| கம்பெனி உரிமையாளருக்கு காரணமானது | 428.72 | 545.85 | 307.65 | 1,542.65 | 475.21 | 552.98 | 434.85 | 1,879.44 |
| மற்ற உரிமையாளருக்கானது | - | - | - | - | - | - | - | - |
| நடப்புக் காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [நடப்புக் காலத்திற்கான (வரிக்குப் பின்) உள்ளடக்கிய இலாபம் / (நஷ்டம்) மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம் (வரிக்குப் பின்)] | 1,272.80 | 551.46 | 541.68 | 1,994.12 | 1,364.54 | 592.68 | 678.61 | 2,442.88 |
| கம்பெனி உரிமையாளருக்கு காரணமானது | 1,272.80 | 551.46 | 541.68 | 1,994.12 | 1,364.54 | 592.68 | 678.61 | 2,442.88 |
| மற்ற உரிமையாளருக்கானது | - | - | - | - | - | - | - | - |
| செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 111.10 | 111.10 | 111.10 | 111.10 | 110.21 | 110.21 | 110.21 | 110.21 |
| ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) | 12,302.01 | 11,028.00 | 9,903.90 | 11,028.00 | 14,452.38 | 13,086.62 | 11,648.20 | 13,086.62 |
| பங்கு பிரீமியம் கணக்கு | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil |
| நிகர மதிப்பு | 12,413.11 | 11,139.10 | 10,015.00 | 11,139.10 | 14,562.59 | 13,196.83 | 11,758.41 | 13,196.83 |
| செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை | 48,807.07 | 47,359.12 | 43,698.38 | 47,359.12 | 63,241.98 | 61,149.70 | 55,731.36 | 61,149.70 |
| நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள் | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil |
| கடன் பங்கு விகிதம் | 3.93 | 4.25 | 4.36 | 4.25 | 4.34 | 4.63 | 4.74 | 4.63 |
| அடிப்படை மற்றும் டைல்யூட்டட் EPS (அடிப்படை & நீர்த்தது) (முக மதிப்பு ₹10/-) (காலாண்டிற்கு ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (on PAT) | 38.59 | 49.13 | 27.69 | 138.85 | 43.12 | 50.17 | 39.46 | 170.53 |
| மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு | Nil | Nil | Nil | Nil | 15.00 | 15.00 | 15.00 | 15.00 |
| மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு | பொருந்தாது | | | | | | | |
| கடன் சேவை கவரேஜ் விகிதம் | | | | | | | | |
| வட்டி சேவை கவரேஜ் விகிதம் | | | | | | | | |

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (URL: www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.sundaramfinance.in) ஆகியவற்றில் கிடைக்கும்.
2. ஜூன் 30, 2025ல் முடிவடைந்த காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவினரால் ஆகஸ்டு 1, 2025 அன்று மதிப்பாய்வு செய்யப்பட்டு, ஆகஸ்டு 4, 2025 அன்று சென்னையில் நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
3. மார்ச் 31, 2025ல் முடிவடைந்த காலாண்டின் புள்ளி விவரங்கள், முந்தைய முழு நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட புள்ளி விவரங்கள் மற்றும் மூன்றாம் காலாண்டின் இறுதிவரை வெளியிடப்பட்ட ஆண்டு முதல் தேதி வரையிலான புள்ளி விவரங்கள், வரையறுக்கப்பட்ட மதிப்பாய்விற்கு உட்பட்டது.
4. முந்தைய காலத்திற்கான தொகைகள் நடப்புக் காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
5. ஜூன் 30, 2025ல் முடிவடைந்த காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் கூட்டு சட்டமுறை தணிக்கையாளர்களால் வரையறுக்கப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டன.

சென்னை
04.08.2025

**போர்டின் உத்தரவுப்படி**
**ராஜீவ் C லோச்சன்**
**நிர்வாக இயக்குநர்**

**சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்**

CIN:L65191TN1954PLC002429
பதிவு பெற்ற அலுவலகம் : 21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை - 600 002.
Tel: 044 2852 1181, Fax: 044 2858 6641
Email: investorservices@sundaramfinance.in www.sundaramfinance.in